# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்
## தரம் - 05 புலமைப் பரிசில் பரீட்சை-2022
## முன்னோடிப் பரீட்சை - 01

EXAMINATION FOR GRADE FIVE STUDENTS FOR SELECTION TO SCHOOLS AND FOR THE AWARD OF BURSARIES, 2022

**மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சை, 2022**

## வினாத்தாள் - I

**ஒரு மணித்தியாலம்**

சுட்டெண் ........................................................

❖ **பரீட்சைக்குத் தோற்றும் உங்களுக்கான அறிவுறுத்தல்கள்.**


- உமது சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- **மூன்றாம் பக்கத்தில்** உள்ள குறித்த இடத்திலும், உமது **சுட்டெண்ணை** எழுதுக.
- இவ்வினாத்தாளில் 40 வினாக்கள் உள்ளன. **எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ் வினாத்தாளிலேயே** தருக.
- ஒவ்வொரு வினாவிற்கும் **மூன்று** விடைகள் வீதம் தரப்பட்டுள்ளன. அவற்றிடையே ஒவ்வொரு வினாவிற்கும் உரிய **சரியான விடையைத் தெரிவு செய்து, அதன் கீழ்க் கோடிடுக.**
- செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

## விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

| பக்க இலக்கம் | பெற்ற புள்ளிகள் |
|---|---|
| 02 | |
| 03 | |
| 04 | |
| 05 | |
| 06 | |
| 07 | |
| 08 | |
| மொத்தம் இலக்கத்தில் | |
| மொத்தம் எழுத்தில் | |

| | பெயரும் ஒப்பமும் |
|---|---|
| முதலாவது பரீட்சகர்<br>(வகுப்பாசிரியர்)<br>புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன் | ........................................<br>பெயர்<br>........................................<br>ஒப்பம் |
| இரண்டாவது பரீட்சகர்<br>(......................................)<br>முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகின்றேன். | ........................................<br>பெயர்<br>........................................<br>பெயர் |
| மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர்<br>மதிப்பிட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன். | ........................................<br>பெயர்<br>........................................<br>ஒப்பம் |
| அதிபர்<br>மேற்பார்வை செய்தேன். | |
| வலய / மாகாண மேற்பார்வையாளர் | |

1. **கட்டத்தின் உள்ளே உள்ள சித்திரத்துக்குப் பெருமளவில் ஒத்ததாக வரையப்பட்டுள்ள சித்திரம் எது?**






(1)



(2)



(3)

2. உரு A ஐ ஒத்த ஓர் உருவைப் பெறுவதற்காக உரு B இல் செய்ய வேண்டிய மாற்றங்களின் எண்ணிக்கை எத்தனை?

உரு-**A**




உரு-**B**




(1) 3 (2) 2 (3) 1


- **3, 4 ஆகிய வினாக்களில் கட்டத்தினுள் உள்ள தொகுதியுடன் சேர்ப்பதற்கு மிகப் பொருத்தமான உருவைத் தெரிவு செய்க.**

3.





(1)




(2)




(3)

4.






(1)




(2)



(3)

5. இந்த உருவைச் சரியாகப் பூர்த்தி செய்ய இணைக்க வேண்டிய மிகப் பொருத்தமான உருவத் துண்டு எது?





(1)



(2)




(3)




பக்கம் 3 ஐப் பார்க்க


6. உரு A ஆனது ஊடு காட்டும் தாளில் வரையப்பட்டுள்ளது. இதனைப் புள்ளிக் கோடுகள் வழியே அம்புக்குறி காட்டும் திசையில் மடிக்கும்போது தோன்றும் உரு யாது?



உரு A (1) (2) (3)


7. கீழே மூன்று உருக்கள் தரப்பட்டுள்ளன. இவ் உருக்கள் மூன்றையும் பயன்படுத்தி உருவாக்கப்பட்ட உரு எது?




(1) (2) (3)

8. கட்டத்தினுள் உள்ள உருக்களின் வரிசையில் அடுத்ததாக வரவேண்டிய உரு எது?





(1) (2) (3)

9. பின்வரும் பாடலினால் குறிப்பிடப்படுவது யாது?


*இன்ப துன்ப நிகழ்வுகளில் முன்னிருப்பேன்*
*இனிய கனிகளையும் தந்திடுவேன்*
*உணவு உண்ணவும் நல்லுதவி செய்வேன்*
*ஏழைகளின் இனிய நண்பனாவேன்*

(1) மா (2) பலா (3) வாழை




பக்கம் 4 ஐப் பார்க்க

10. மாணவி ஒருவர் தரம் ஒன்றிலிருந்து தரம் ஐந்து வரை பயன்படுத்திய காலுறைகளின் புகைப்படங்கள் படத்தில் காட்டப்பட்டுள்ளன. இவற்றுள் மாணவி தரம் ஐந்திலும் தரம் மூன்றிலும் பயன்படுத்திய காலுறைகளாக இருக்கக் கூடியவை முறையே.




(1) A உம் C உம்     (1) D உம் C உம்     (3) D உம் B உம்

- **கீழே தரப்பட்டுள்ள தகவல்களை அடிப்படையாகக் கொண்டு 11, 12 ஆகிய வினாக்களுக்கு விடை தருக.**




**தரப்பட்டுள்ள உருவில் A, B, C, D, E, F, G, H எனக் குறிக்கப்பட்டுள்ள கட்டங்களில் வகுப்பறை ஒன்றில் உள்ள மாணவர் குழுக்கள் சிலவற்றின் எண்ணிக்கை தொடர்பான விபரம் காட்டப்பட்டுள்ளது. குழு F இல் உள்ள மாணவர் எண்ணிக்கை 12 ஆகும்.**


11) **E, G** ஆகிய இரு குழுக்களிலும் உள்ள மாணவர்களின் எண்ணிக்கை யாது?

(1) 32     (2) 24     (3) 36

12. வகுப்பறையில் உள்ள மாணவர்களின் மொத்த எண்ணிக்கை யாது?


(1) 96     (2) 60     (3) 108

13. கட்டத்தில் உள்ள குறியீடுகளை அவதானித்து A என்ற இடத்தில் வரவேண்டிய எண்ணைத் தெரிவு செய்க.





(1) 14     (2) 16     (3) 15

14. முழு உருவின் பரப்பளவானது நிழற்றப்பட்ட உருவின் பரப்பளவின் எத்தனை மடங்கு ஆகும்.



(1) 12     (2) 6     (3) 10

15. பின்வரும் உருவில் நிறந்தீட்டப்படாத பகுதியில் அவதானிக்கக் கூடியதாக எத்தனை சதுரங்கள் உள்ளன?



(1) 5     (2) 6     (3) 7




பக்கம் 5 ஐப் பார்க்க

16. நீச்சல் தடாகத்தில் மாணவர்களுக்கான நீச்சல் போட்டி காலை 6.00 மணிக்கு ஆரம்பமானது. போட்டியிலே பங்குபற்றிய கரன், ராதா, மீரா, சுமன், வரன் ஆகிய மாணவர்கள் நீந்தி முடித்த நேரங்கள் கடிகாரத்தில் காட்டப்பட்டுள்ளன.

| 00: 05: 10 | 00: 05: 08 | 00: 04: 08 | 00: 08: 10 | 00: 06: 05 |
|---|---|---|---|---|
| மீரா | கரன் | சுமன் | வரன் | ராதா |

நீச்சல் போட்டியில் முதலாவதாகவும் இறுதியாகவும் வருகை தந்தவர்கள் முறையே,


(1) வரன், சுமன் 2) சுமன், வரன் (3) மீரா, சுமன்

17. 

இரண்டு பற்சில்லுகளும் சுழலும் திசையானது அருகே தரப்பட்டுள்ளது. இவை சுழலும் திசைகளை அம்புக்குறி மூலம் காட்டப்பட்டுள்ள முறையானது,

(1) சரியானது (2) தவறானது (3) கூறமுடியாது

18. கீழே வட்டவடிவ அலங்காரம் ஒன்றை அமைப்பதற்கு நூலொன்றில் அலங்காரக் கொடிகள் ஒட்டப் பட்டுள்ளன. இவற்றினை வட்டமாக அமைக்கும் போது ☆ இவ் உருவிற்கு எதிரே இருக்கும் உரு எது?



(1) ● (2) ○ (3) ▼

19. தரப்பட்ட எண் கோலத்தில் A,B ஆகிய கட்டங்களில் வரவேண்டிய எண்கள் முறையே,

| | | | | |
|---|---|---|---|---|
| **2** | **4** | **A** | **2** | **5** |
| **2** | **2** | **4** | **B** | **4** |

(1) 3, 8 (2) 2, 8 (3) 2, 5


20. பாலாவின் தம்பி ராஜா ஆவார். பாலா ருக்மணியையும் ராஜா ரேவதியையும் திருமணம் செய்து கொண்டனர். பாலாவின் மகன் அகிலன் ஆவான். அகிலனுக்கு ரேவதி என்ன உறவு முறை?


(1) பெரியம்மா ((2) மாமி (3) சிறியதாய்

21. அமலன் வாசிப்பதற்காக நூல் நிலையத்தில் ஒரு புத்தகத்தை எடுத்தபோது அதில் 13, 16, 17, 72, 73, 100, 101, 102 ஆகிய பக்கங்கள் கிழிக்கப்பட்டிருப்பதைக் கண்டு நூலகப் பொறுப்பாளரிடம் தாள்கள் கிழிக்கப்பட்டிருப்பதைக் காட்டினான். அமலன் அப்புத்தகத்தில் எத்தனை தாள்கள் கிழிக்கப் பட்டுள்ளதாக நூலகரிடம் தெரிவித்தான்.


(1) 4 (2) 7 (3) 8

22. இது ஒரு விளையாட்டுச் செயன்முறையாகும். அருகே உள்ள உருவில் உள்ளவாறு ஒவ்வொரு மாணவர்களுக்கும் குறித்தவாறு ஆங்கில எழுத்துக்கள் கொண்டதான உரு வழங்கப்பட்டது. அவர்கள் முதலாவது தடவை ஒலியெழுப்பும்போது எதிர்ப் பக்கத்திற்கு ஆங்கில எழுத்துக்களை இடம் மாற்ற வேண்டும். இரண்டாவது தடவை ஒலியெழும்பும் போது வலஞ்சுழியாக உள்ள பக்கத்திற்கு இடம் மாற்ற வேண்டும். மேலுள்ள ஒழுங்கில் இரண்டாவது தடவை மணி ஒலித்த பின் ஆங்கில எழுத்துக்கள் இருக்கும் ஒழுங்கைக் காட்டும் விடை.




(1)



(2)




(3)


பக்கம் 6 ஐப் பார்க்க


23. நிமிடத்திற்கு 80 m எனும் மாறாத வேகத்தில் நடக்கும் ஒருவர் சதுர வடிவப் பூந்தோட்டம் ஒன்றைச் சுற்றி அமைக்கப்பட்டிருந்த நடை பாதையை ஒரு தடவை சுற்றிவரப் பத்து நிமிடங்கள் தேவைப்பட்டது எனின், அப் பூம்பாத்தியின் ஒரு பக்க நீளம் யாது?

(1) 200 m　　(2) 800 m　　(3) 300 m

24. A,B ஆகிய போத்தல்களில் உள்ள மாபிள்களின் எண்ணிக் கையின் கால்வாசி வீதம் வெளியே எடுத்து, அவை அப் போத்தல்கள் இரண்டிலும் மாற்றி இடப்பட்டன. இப்போது போத்தல் A இல் உள்ள மாபிள்களின் எண்ணிக்கையானது போத்தல் B இல் உள்ள மாபிள்களின் எண்ணிக்கைக்கு,





(1) கூடுதலானது
(2) சமமானது
(3) குறைவானது

25. 


வட்டங்களின் மையப் புள்ளிகளினூடாக நிரையாகவும், நிரலாகவும் நேர் கோடுகள் வரையும்போது கிடைக்கும் உருவில் அவதானிக்கக் கூடிய சதுரங்களின் எண்ணிக்கையாக அமைவது,

(1) 6　　(2) 8　　(3) 2

26. ஒரு தாயக் கட்டை மூன்று தடவைகள் உருட்டும்போது தோன்றும் நிலைகள் படத்தில் காட்டப் பட்டுள்ளன. இலக்கம் 1 இற்கு எதிராக அமையும் இலக்கம் எது?




(1) 4　　(2) 2　　(3) 5

27. 


தரப்பட்டுள்ள பாதை வழியே A,B,C,D எனும் இடங்களில் பனை, தென்னை, கமுகு, கித்துள் எனும் ஒழுங்கில் மரங்கள் நாட்டப் பட்டுள்ளன. A இலிருந்து D வரையான தூரம் 17 m ஆகும். எனின், ஒன்றுக்கு ஒன்று 10 m இடைவெளியில் உள்ள மரங்கள் எவை?

(1) பனை, கமுகு　　(2) தென்னை, கித்துள்　　(3) கமுகு, கித்துள்

28. கொழும்பு, கட்டுநாயக்க விமான நிலையத்தில் இருந்து இந்தியா, பாகிஸ்தான், சீனா ஆகிய நாடுகளிற் கான விமானங்கள் 10 நிமிடம் 30 நிமிடம், 15 நிமிடம் என்ற இடைவெளிக்கேற்ப புறப்பட்டுச் சென்று கொண்டிருந்தன. திங்கட்கிழமை காலை 00:30 மணிக்கு மூன்று விமானங்களும் முதலாவது தடவை ஒரே நேரத்தில் புறப்பட்டுச் சென்றன எனின், மூன்று விமானங்களும் அந்த நாளில் 5 ஆவது தடவையாக ஒன்றாகப் புறப்பட்ட நேரம் யாது?


(1) 14: 30　　(2) 02: 30　　(3) 03: 00


பக்கம் 7 ஐப் பார்க்க


29. 2018ஆம் ஆண்டில் ஒரு குடும்பத்தில் உள்ள அப்பா, அம்மா, பிள்ளைகள் ஆகியோரின் வயதுகளின் கூட்டுத்தொகை 120 ஆகும். 2022 இல் அவர்கள் அனைவரதும் வயதுகளின் கூட்டுத்தொகை 140 எனின், அக்குடும்பத்திலுள்ள பிள்ளைகளின் எண்ணிக்கை யாது?

(1) 5 (2) 4 (3) 3

30.




உரு A





உரு B

உரு -A இல் காணப்படும் பெரிய பெட்டியினுள் உரு-B இல் உள்ளவாறு எத்தனை பெட்டிகள் அடுக்க முடியும்?

(1) 6 (2) 3 (3) 2

31.




ஒத்த மரக்குற்றிகளைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்ட அமைப்பு உருவில் காட்டப்பட்டுள்ளது. பெரிய சதுர மரக்குற்றியொன்று கிடைக்குமாறு இந்த அமைப்பைப் பூரணப்படுத்துவதற்கு மேலும் எத்தனை சிறிய மரக்குற்றிகள் தேவை.

(1) 46 (2) 28 (3) 14

32. உமாவின் தேசிய அடையாள அட்டை இலக்கம் 12 இலக்கங்களைக் கொண்டது. அதில் 7 இலக்கங்கள் ஒற்றை எண்களாக உள்ளன. ஓர் இலக்கம் 3 தடவைகளும் வேறோர் இலக்கம் 2 தடவைகளும் வந்துள்ளன. 0 எட்டாவதாக வந்துள்ளது எனின், உமாவின் அடையாள அட்டை இலக்கமாக அமையக் கூடிய விடை,

(1) 19 73 68 30 34 45 (2) 19 73 62 60 74 41 (3) 19 72 64 10 34 41


33.



உருவானது கம்பித் துண்டுகளை வெட்டி சதுர வடிவிலான யன்னல் செய்யப்பட்டுள்ள முறையைக் காட்டுகிறது. இதற்குப் பயன்படுத்திய கம்பியின் மொத்த நீளம் 42 m ஆகும் எனின், உருவைச் சுற்றியுள்ள நீளம் யாது?

(1) 28 m (2) 24 m (3) 18 m

34.




1 லீற்றர் நீர் உள்ள பாத்திரத்தில் A,B என்ற இரண்டு துவாரங்கள் உள்ளன. ஒவ்வொரு நிமிடமும் A என்ற துவாரத்தின் ஊடாக 150 mℓ நீரும் B என்ற துவாரத்தின் ஊடாக 100 mℓ நீரும் வெளியேறுகின்றது எனின், பாத்திரம் முழுவதும் வெறுமையாக எடுக்கும் நேரம் யாது?

(1) 10 நிமிடங்கள் (2) 5 நிமிடங்கள் (3) 4 நிமிடங்கள்

35. ராதா, வீணா ஆகிய இருவரும் சம அளவுள்ள பணத்தை வைத்திருந்தனர். அவர்கள் ஒவ்வொருவரும் தம்மிடம் இருந்த பணத்தில் இருந்து உணவிற்காக செலவிட்ட விபரம் வருமாறு.



ராதா $\frac{1}{5}$ பகுதியையும், வீணா $\frac{2}{4}$ பகுதியையும் செலவிட்டாள். வீணா உணவிற்காக செலவு செய்த பின்னர் மீதியாக ரூபாய் 2500.00 வைத்திருந்தாள் எனின், ராதா தனது பணத்தில் உணவிற்காக செலவிட்ட தொகை யாது?



(1) ரூபாய் 500.00 (2) ரூபாய் 1000.00 (3) ரூபாய் 800.00

36. புத்தக விற்பனை நிலையமொன்றிலிருந்த புத்தகங்களை பொதியொன்றில் 4 அல்லது 5 அல்லது 6 வீதம் பொதிகளாக்குவதற்கு இரண்டு புத்தகங்கள் போதாமல் இருந்தன. அவற்றைப் பொதி ஒன்றில் 7 புத்தகங்கள் இருக்குமாறு பொதி செய்யும்போது இரண்டு புத்தகங்கள் எஞ்சுகின்றன எனின், பொதி செய்யப்பட்ட புத்தகங்களின் ஆகக்குறைந்த எண்ணிக்கை யாது?

(1) 74 (2) 58 (3) 49

- **37 , 38 ஆகிய வினாக்களுக்குக் கீழே தரப்பட்டுள்ள தொடர்பினை அவதானித்து விடை எழுதுக.**

 +  = ரூபாய் 280.00

 +  = ரூபாய் 500.00

37. 6 பென்சில்களினதும் 3 கொப்பிகளினதும் விலை யாது?

(1) ரூபாய் 500.00 (2) ரூபாய் 780.00 (3) ரூபாய் 800.00

38. ஒரு கொப்பியின் விலைக்கும் ஒரு பென்சிலின் விலைக்கும் இடையிலான வித்தியாசத் தொகை யாது?

(1) ரூபாய் 180.00 (2) ரூபாய் 100.00 (3) ரூபாய் 200.00

❖ **பின்வரும் தகவலை அடிப்படையாகக் கொண்டு 39, 40 ஆகிய வினாக்களிற்கு விடை தருக.**

**இன்றைய தகவல்**

**12.08.2019**

- **உலக யானைகள் தினம்**
- **சர்வதேச இளைஞர் தினம்**
- **1ஆவது தொலைத்தொடர்பு செய்மதி ஏவப்பட்ட தினம் (1960)**

39. உலக யானைகள் தினம் கொண்டாடப்படும் மாதமும் திகதியும் முறையே,

(1) யூன் - 12 (2) ஆகஸ்ட் - 12 (3) நவம்பர்- 12

40. 1 ஆவது தொலைத் தொடர்பு செய்மதி ஏவப்பட்ட நூற்றாண்டு தசாப்தம் முறையே,
1) 20 ஆம் நூற்றாண்டு 7 ஆம் தசாப்தம்
2) 19 ஆம் நூற்றாண்டு 6 ஆம் தசாப்தம்
3) 20 ஆம் நூற்றாண்டு 6 ஆம் தசாப்தம்

# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்
## தரம் - 05 புலமைப் பரிசில் பரீட்சை-2022
## முன்னோடிப் பரீட்சை - 01

**EXAMINATION FOR GRADE FIVE STUDENTS FOR SELECTION TO SCHOOLS AND FOR THE AWARD OF BURSARIES, 2022**

**மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சை, 2022**

## வினாத்தாள் - II

**1 மணித்தியாலம் 15 நிமிடங்கள்**

சுட்டெண் ........................................................

❖ **பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்.**

- உமது சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் **புள்ளிக்கோட்டின்** மீது எழுதுக.
- **மூன்றாம் பக்கத்தில்** உள்ள குறித்த இடத்திலும், உமது **சுட்டெண்ணை** எழுதுக.
- இவ் வினாத்தாளில் 60 வினாக்கள் உள்ளன. சில வினாக்களில் உப பகுதிகளும் உள்ளன.
- **எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ் வினாத்தாளிலேயே எழுதுக.**
- விடைகள் எழுதப்பட வேண்டிய வினாக்களின் விடைகளைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- விடையின் கீழே கோடிடுமாறு கேட்கப்பட்டிருக்கும்போது **சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழே கோடிடுக.**
- செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

## விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

| பக்க இலக்கம் | பெற்ற புள்ளிகள் |
|---|---|
| 02 | |
| 03 | |
| 04 | |
| 05 | |
| 06 | |
| 07 | |
| 08 | |
| இறுதிப் புள்ளிகள் | |
| இலக்கத்தில் | |
| எழுத்தில் | |

| | பெயரும் ஒப்பமும் |
|---|---|
| முதலாவது பரீட்சகர்<br>(வகுப்பாசிரியர்)<br>புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன் | ..................................... பெயர்<br>..................................... ஒப்பம் |
| இரண்டாவது பரீட்சகர்<br>(.....................................)<br>முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகின்றேன். | ..................................... பெயர்<br>..................................... பெயர் |
| மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர்<br>மதிப்பிட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன். | ..................................... பெயர்<br>..................................... ஒப்பம் |
| அதிபர்<br>மேற்பார்வை செய்தேன். | |
| வலய / மாகாண மேற்பார்வையாளர் | |

**01. பின்வரும் பந்தியை வாசியுங்கள்.**

**அன்று மாலைப் பொழுதினைக் கழிப்பதற்காக நான் எனது குடும்பத்தினருடன் பூங்காவிற்குச் சென்றேன். அப்பா நுழைவாயிலில் பற்றுச்சீட்டைப் பெற்று எங்களை உள்ளே அழைத்துச் சென்றபோது தென்றல் காற்று எனது மேனியைத் தழுவி இன்பமூட்டியது. பூஞ்செடிகளில் உள்ள பல வண்ணப் பூக்கள் எங்களை வரவேற்றன. மத்தியில் உள்ள சிறிய குளத்தில் வாத்துகள் தமது குஞ்சுகளுடன் ஆரவாரம் செய்து நீந்தி விளையாடுவது எனக்கு கண்கொள்ளாக்காட்சியாக இருந்தது.**

- **பந்தியைத் துணையாகக் கொண்டு விடை எழுதுக.**

(i) நான் ஏன் பூங்காவிற்குச் சென்றேன்?

....................................................................................................................................

(ii) பூங்காவில் எங்களை வரவேற்றவை எவை?

....................................................................................................................................

(iii) எனது மேனியைத் தழுவி இன்பமூட்டியது எது?

....................................................................................................................................

(iv) அமைதி என்பதன் எதிர்க்கருத்தைக் குறிப்பிடுவதற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ள சொல் எது?

....................................................................................................................................

(v) பந்தியில் இடம்பெற்றுள்ள சினைப் பெயர்ச் சொல் ஒன்றைத் தருக.

....................................................................................................................................

(vi) இப் பந்தியில் கூறப்படாத கருத்தின் கீழ்க் கோடிடுக.

(1) மாலைப் பொழுதைப் பூங்காவில் கழித்தமை.
(2) வாத்துகள் நீந்தும் கண்கொள்ளாக் காட்சி.
(3) பூக்களில் இருந்து நறுமணம் வீசியமை.

02. இடப்பெயர்ச் சொல்லைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

(1) வட்டம் (2) முற்றம் (3) கிளை

03. **பின்வரும் தொடர் மொழிக்குரிய தனிச் சொல்லைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.**

ஒரே சமயத்தில் நூறு விடயங்களை அவதானிக்கும் ஆற்றல் படைத்தோன்.......................................................

04. பின்வரும் இடைவெளிகளுக்குப் பொருத்தமான சொல்லை அடைப்பினுள் இருந்து தெரிவு செய்து புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

(நாம், மாமா, மரம், சிறுவர்கள், கற்கள்)

(i) உயர்திணை பன்மை படர்க்கைப் பெயர்ச் சொல் ...............................................................................

(ii) அஃறிணை ஒருமை படர்க்கைப் பெயர்ச் சொல் ...............................................................................



பக்கம் 3 ஐப் பார்க்க

05. (i) பின்வரும் பழமொழியைப் பூர்த்தி செய்யப் பொருத்தமான சொல்லைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.

குப்பையிற் கிடந்தாலும் .................................. மங்காது.

(ii) பின்வரும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான பழமொழியைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.

**உடல் வலிமை அவசியம்**

.............................................................................................................................................

06. கீழே தரப்பட்டுள்ள இணைமொழிகளைப் பூர்த்தி செய்க.

(i) நீட்டி ................................

(ii) கண்ட .............................

07. **பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் எழுவாய் பயனிலைத் தொடர்பு சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (×) எனவும் எதிரேயுள்ள அடைப்புக் குறிக்குள் அடையாளமிடுக.**

(i) நூல் நிலையத்தில் புத்தகங்கள் ஒழுங்காக அடுக்கப்பட்டிருந்தது. (    )

(ii) தாய்க்குருவி குஞ்சுகளுக்கு இரை ஊட்டின. (    )

(iii) அமாவாசை நாளில் இருள் நிறைந்திருக்கும். (    )

08. **கீறிட்ட இடத்தில் வரவேண்டிய சரியான விடையை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

(i) காடுகளை ............................. (அலி / அளி / அழி) ப்பதினால் சுற்றுப்புறச் சூழல் பாதிப்படைகிறது.

(ii) சுதந்திர தின விழாவின் போது .......................... (வான/ வாண) வேடிக்கைகள் காட்டப்பட்டன.

09. பின்வரும் ஒவ்வொரு மரபுத் தொடரும் வெளிப்படுத்தும் கருத்தைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.

(i) கதை வளர்த்தல் ....................................................................................

(ii) தலை கவிழ்தல் ......................................................................................

10. **கீழே தரப்பட்டுள்ள வாக்கியத்தில் உள்ள செயப்படுபொருள் அடைமொழியை இனங்கண்டு கீறிட்ட இடத்தில் எழுதுக.**

சின்னத் தேனீ வண்ணப் பூவில் இனிய தேனை உறிஞ்சிக் குடித்தது.
செயப்படுபொருள் அடைமொழி ....................................................................

11. தரப்பட்டுள்ள ஆங்கிலச் சொற்களுக்கு உரிய தமிழ்ச் சொற்களை எழுதுக.


(i) Meat : ..........................................


(ii) Branch : ....................................



பக்கம் 4 ஐப் பார்க்க

12. தரப்பட்டுள்ள ஒவ்வொரு படத்திற்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.





(i) ------------------ (ii) ------------------

13. கீழே தரப்பட்டுள்ள சொற்களைச் சரியாக ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியமாக்கி எழுதுக.

(i) my / This / sister / is : ....................................................................................................

(ii) book / I / reading / a / am : ....................................................................................................


14. "ஷிஷ்யாவ" என்ற சிங்களச் சொல்லுக்குரிய தமிழ்ச் சொல்லை எழுதுக.

....................................................................................................

15. பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் சொல்லப்படும் விதத்தினைத் தமிழில் எழுதுக.

"தாத்தாமார் இருக்கிறார்கள்" : ....................................................................................................

16. எண் சட்டத்தில் வகைக் குறிக்கப்படும் எண்ணின் எண் பெயரை எழுதுக.




....................................................................................................

17. பத்தாயிரத்தினிடத்து இலக்கம் 6, ஆயிரத்தினிடத்து இலக்கம் 8, நூறினிடத்து இலக்கம் 5, பத்தினிடத்து இலக்கம் 9, ஒன்றினிடத்து இலக்கம் 4 ஆகவுள்ள எண் யாது?

....................................................................................

18. எண் கோலத்திற்கேற்ப வெற்றிடங்களில் வரவேண்டிய எண்களை எழுதுக.

.............. , .............. , 81, 90, 99, 108

19. 36 தோடம்பழங்களில் நான்கில் மூன்று பங்குகளில் எத்தனை தோடம்பழங்கள் உண்டு?

....................................................................................

20. ஒருவர் ஒரு தென்னந் தோட்டத்திலிருந்து 1617 தேங்காய்களையும் வேறொரு தென்னந் தோட்டத்திலிருந்து 1428 தேங்காய்களையும் வாங்கினார். அவர் இரு தென்னந் தோட்டங்களிலிருந்தும் வாங்கிய தேங்காய்களின் எண்ணிக்கைகளுக்கிடையே உள்ள வித்தியாசம் யாது?

....................................................................................

21. ஒரு தொகைப் புத்தகங்களை நான்கு பாடசாலைகளுக்கிடையே சமமாகப் பங்கிட்டபோது ஒரு பாடசாலைக்கு 208 புத்தகங்கள் கிடைத்தன. பங்கிடப்பட்ட புத்தகங்களின் மொத்த எண்ணிக்கை யாது?

....................................................................................



பக்கம் 5 ஐப் பார்க்க

22. 07: 55 எனும் நேரத்தினை 12 மணித்தியாலக் கடிகாரம் காட்டும் விதத்தில் எழுதுக.

..........................................................................

23. A, B, C, D என்னும் ஒழுங்கில் நகரங்கள் அமைந்துள்ளன.
நகரம் A இலிருந்து நகரம் D வரையான தூரம் 150 km ஆகும்.
நகரம் A இலிருந்து நகரம் C வரையான தூரம் 112 km ஆகும்.
நகரம் B இலிருந்து நகரம் D வரையான தூரம் 78 km ஆகும்.


(i) நகரம் A இலிருந்து நகரம் B இற்கு இடையிலான தூரம் யாது?

..........................................................................km

(ii) நகரம் C இலிருந்து D வரையான தூரம் யாது?


..........................................................................km

24. தரப்பட்டுள்ள திண்மப் பொருளின் முகங்களின் எண்ணிக்கை யாது?



..........................................................................

25. உருவில் நிறந்தீட்டப்படாத பகுதியை ஒரு தசம எண்ணாக எழுதுக.



..........................................................................

26. ரூபாய் 80.00 விலையுள்ள சிறுவர் கதைப்புத்தகத்தினையும் ரூபாய் 35.00 விலையுள்ள வர்ணப் பெட்டியினையும் வாங்கி ரூபாய் 100.00 நாணயத்தாள்கள் இரண்டைக் கொடுத்தால் கிடைக்கும் மீதிப் பணம் எவ்வளவு?

ரூபாய் ..........................................................................


27. மாணவன் ஒருவன் 1 தொடக்கம் 10 வரையுள்ள உரோம இலக்கங்களைத் தீக்குச்சிகளினால் உருவாக்கியிருந்தான். அதற்கேற்ப உரோம இலக்கத்தில் அமைந்த எட்டினையும் நான்கினையும் அமைப்பதற்கு அவனுக்குத் தேவைப்பட்ட தீக்குச்சிகளின் மொத்த எண்ணிக்கை யாது?

..........................................................................

28. 150 cm நீளமுள்ள கம்பியானது இரண்டு சம துண்டுகளாக வெட்டப்பட்டது. பின்னர், இரு துண்டுகளும் 15 cm வீதம் ஒன்றின் மீது ஒன்று வைத்து ஒட்டப்பட்டன. தற்போது கம்பியின் நீளம் யாது?

.......................................................................... cm

29. ஒரு மணித்தியாலத்தில் கடை ஒன்றில் விற்பனை செய்யப்பட்ட மாபிள்களின் நிறங்கள் பற்றிய தகவல்கள் கீழேயுள்ள வரைபில் காட்டப்பட்டுள்ளன.




(i) கடையில் குறைந்தளவில் விற்பனை செய்யப்பட்ட மாபிள்களின் நிறம் எது?

..........................................................................

(ii) கடையில் விற்கப்பட்ட மாபிள்களின் மொத்த எண்ணிக்கை யாது?

..........................................................................



பக்கம் 6 ஐப் பார்க்க

● **30 தொடக்கம் 59 வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

30. உடல், உளச் சுகத்திற்கான செயற்பாட்டில் "இதயத்துடிப்பைச் செவிமடுத்தல்" இடம்பெறும் படிமுறை.

(1) படிமுறை -3 (2) படிமுறை - 2 (3) படிமுறை - 5

31. தன்னிறைவையும் செழிப்பையும் வெளிப்படுத்தும் அரச இலச்சினையில் உள்ள குறியீடு எது?


(1) நெற்கதிர் (2) நிறை குடம் (3) தர்ம சக்கரம்

32. இலங்கை முழுவதையும் கைப்பற்றி ஆண்ட வெளி நாட்டவர்,

(1) ஒல்லாந்தர் (2) போர்த்துக்கேயர் (3) பிரித்தானியர்

33. ஆனி, பங்குனி மாதங்களில் பூக்கும் தாவரங்கள் முறையே,

(1) இலுப்பை, பாலை (2) வாகை, வீரை (3) நாவல், விளா

34. 

இவ் உருவில் காணப்படும் கைக்குட்டையில் உள்ள பூவினைச் சுற்றிவரத் தைப்பதற்குப் பொருத்தமான தையல் முறை எது?

(1) சங்கிலித் தையல் (2) கம்பளித் தையல் (3) நரம்புத் தையல்

35. ஒருவருக்குப் பாம்பு தீண்டியவுடன் செய்யக் கூடிய முதலுதவி,


(1) காயத்தை சவர்க்காரமிட்டு ஓடும் தூய நீரினால் கழுவுதல்.
(2) காயமுள்ள இடத்தை நூலால் இறுக்கிக் கட்டுதல்.
(3) காயமுள்ள இடத்திற்கு எண்ணெய் பூசுதல்.

36. கலப்புணவு ஒன்றில் காணப்பட வேண்டிய உணவுத் தொகுதிகள்,
(1) சோறு, கிழங்கு, இறைச்சி, முட்டை, பருப்பு
(2) சோறு, கீரை, இறைச்சி, வாழைப்பழம், பருப்பு
(3) சோறு, கீரை, மீன், கிழங்கு, பூசணி

37. 


தரப்பட்ட உபகரணத்தினால் பொருளின் மீது விசை பிரயோகிக்கப்படும் இடம் எது?

(1) A (2) B (3) C

38. 

இவ் அலங்காரத்தின் பெயர்,
(1) கொடி அலங்காரம்
(2) கல்பித்து அலங்காரம்
(3) பலாப்பொத்தி அலங்காரம்.

39. பின்வருவனவற்றுள் தொற்றா நோயாகக் கருதக் கூடியது எது?

(1) இரைப்பையழற்சி (2) சீதபேதி (3) சின்னமுத்து

40. நன்கு சூடாக்கப்பட்ட உலோகக் கரண்டி மீது நீர்த்துளியொன்றை இடும்போது யாது நிகழும்?

(1) நீர் குளிர்ச்சியடையும் (2) ஒலி எழும் (3) நீர்த்துளி அப்படியே இருக்கும்

41. "வானத்தில் இருந்து விழும் ஒவ்வொரு மழைத்துளியையும் வீணாக்காது பயன்பெற வேண்டும்" எனும் கூற்றுக்குரிய மன்னன் யார்?

(1) தாதுசேனன் (2) பராக்கிரமபாகு (3) பண்டுகாபயன்



பக்கம் 7 ஐப் பார்க்க

42. 

அருகிலுள்ள வீதிச் சமிக்ஞைக் குறியீடு குறிப்பது,

(1) முன்னால் பாதை வேலை
(2) முன்னால் பாதசாரி கடவை
(3) முன்னால் சிறுவர் கடவை

43. 

படத்தில் உள்ள விளையாட்டின் பெயர் யாது?

(1) எட்டுக்கோடு
(2) கிட்டிப்புள்
(3) பல்லாங்குழி

44. பின்வரும் தாவரங்களுள் இலங்கைக்கே உரித்தானது எது?

(1) எண்ணை (2) பனை (3) மருது

45. தேசிய மரபுரிமையாகவும் உலக மரபுரிமையாகவும் கணிப்புப் பெற்றுள்ளது எது?

(1) தாமரைக் கோபுரம் (2) மகா போதி விருட்சம் (3) களனி கங்கை

46. மேற்பரப்பில் ஒட்டியிருப்பதற்கு விசேட பாதங்கள் இருக்கும் பிராணி எது?

(1) ஓணான் (2) பல்லி (3) உடும்பு

47. இலையுண்ணி, ஊனுண்ணி, அனைத்துமுண்ணி முறையே உள்ள பிராணிகள் எவை?


(1) ஆடு, தும்பி, நாய் (2) மான், நாய், கோழி (3) முயல். நரி, தும்பி

48. காடழிப்பதனால் ஏற்படும் விளைவுகள்,
(1) சூழல் வெப்பநிலை அதிகரித்தல், நில வெடிப்புகள் தோன்றுதல்.
(2) மழை பெய்தல், தாவரங்கள் செழித்து வளர்தல்.
(3) சூழல் குளிர்ச்சி அடைதல், சுத்தமான காற்றுக் கிடைத்தல்.

49. மகாவலிகங்கை கடலுடன் கலக்கும் மாகாணம் எது?

(1) வடமாகாணம் (2) தென்மாகாணம் (3) கிழக்கு மாகாணம்

50. பின்வரும் மின்சுற்றுக்களில் மின்குமிழ் ஒளிரக் கூடிய மின்சுற்று எது?




(1) (2) (3)

51. இலங்கைக்கே உரித்தான பிராணிகள் எவை?

(1) நீர்ப்பாம்பு, கலவத்தன் (2) காட்டுக்கோழி, கிளி (3) சுண்டெலி, ஓநாய்

52. சூரிய ஒளி பயன்படுத்தப்படும் சந்தர்ப்பம் அல்லாதது எது?
(1) உப்பளங்களில் கடல் நீரிலிருந்து உப்பைப் பிரித்தெடுத்தல்.
(2) பழக்கலவை தயாரித்தல்.
(3) ஞாயிற்றுக் கலங்கள் மூலம் மின்னுற்பத்தி செய்தல்.

53. ஆதிகாலத்தில் நீரைச் சுத்தஞ்செய்த முறையாகக் கருதக் கூடியது எது?

(1) வடிகட்டியைப் பயன்படுத்துதல் (2) துணியினூடாக வடித்தல் (3) குளோரீன் இடுதல்



பக்கம் 8 ஐப் பார்க்க


54. றம்ழான் பண்டிகையுடன் தொடர்புபட்ட சமயத் தலம் எது?

(1) பன்சல (2) மஸ்ஜித் (3) தேவாலயம்


55. நீர்ப்பாத்திரம் கொடுத்து விருந்துண்ண வரவேற்கும் நடைமுறையைக் கொண்டவர்கள்,

(1) சிங்களவர்கள் (2) முஸ்லிம்கள் (3) பறங்கியர்

56. "தேசிய எதிர்பார்ப்புக்கள்" என்ற நூலின் ஆசிரியர்,


(1)


(2)


(3)

57. விற்றமின் B குறைபாட்டினால் ஏற்படும் தாக்கம் எது?

(1) உடல் எடை குறைதல் (2) உடல் பொலிவிழத்தல் (3) பசியின்மை

58. நகர்ப்புறங்களில் உள்ள வீடுகளுக்குத் தேவையான நீர் விநியோகம் செய்யும் நிறுவனம் எது?

(1) நீர் வடிகாலமைப்பு சபை.
(2) தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை.
(3) நீர் வடிகால் மற்றும் நீர் வழங்கு சபை.

59. உலகிலே பனிக்கட்டியாக உறைந்த நிலையில் காணப்படும் நீர் எத்தனை சதவீதமாக உள்ளது?

(1) 97 சதவீதம் (3) 4 சதவீதம் (4) 2 சதவீதம்

60. "காலைக் கூட்டத்தில் அதிபர் என்னைப் பாராட்டியபோது எனது மனதில் தோன்றிய எண்ணங்கள்" என்பதைத் தலைப்பாகக் கொண்டு மூன்று வாக்கியங்கள் எழுதுக.

(ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும். எழுவாய் பயனிலைத் தொடர்பும் எழுத்துக் கூட்டலும் சரியாக இருத்தல் வேண்டும்.)

(1) ..........................................................................................

..........................................................................................

(2) ..........................................................................................

..........................................................................................

(3) ..........................................................................................

..........................................................................................